ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2385/12 - 2024 මැයි මස 21 වැනි අඟහරුවාදා - 2024.05.21

*2385/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 94/47* (viii)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "கொன்னவ ஸ்ரீ விஷ்ணு தேவாலய புனித பிரதேசம்" என அழைக்கப்படும் காணி இடப்பிரதேசத்துக்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாகவிருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான "கொன்னவ ஸ்ரீ விஷ்ணு தேவாலய புனித பிரதேசம்" உருவரைப் பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024, மே 16.*

### அட்டவணை

### கொன்னவ ஸ்ரீ விஷ்ணு தேவாலய புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

1. வடமேல் மாகாணத்தின், குருநாகல் நிருவாக மாவட்டத்திலுள்ள பமுனாகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, தேவமெத்தே கோரளை சிறு பிரிவின், இலக்கம் 1236, பானவ கிராம அலுவலர் பிரிவினுள், சூரியகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் 2010, மாச்சு மாதம் 25 ஆந் திகதியைக் கொண்ட இறுதிக் கிராம வரைபட இலக்கம் 2539 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக தேவாலேலங்கஹேன என்னும் காணித்துண்டு இல. 2 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் 0.0344 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இலக்கம் 2**

வடக்கு : கொன்னவ கிராம எல்லை ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் கொன்னவ கிராம எல்லை.

2. வடமேல் மாகாணத்தில், குருநாகல் நிருவாக மாவட்டத்திலுள்ள பமுனாகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, தேவமெத்தே கோரளை சிறு பிரிவின், இலக்கம் 1236, பானவ கிராம அலுவலர் பிரிவினுள், கொன்னவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் 2010, மாச்சு மாதம் 25 ஆந் திகதியைக் கொண்ட இறுதிக் கிராம வரைபட இலக்கம் 2540 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக தேவாலேலங்கஹேன என்னும் காணித்துண்டு இல. 4 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் 0.6924 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இலக்கம் 4**

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் சூரியகொட கிராம எல்லை ;
தெற்கு : சூரியகொட கிராம எல்லை மற்றும் காணித்துண்டு இலக்கம் 1 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1.

EOG 05-0155/ 1

---

ச. வ. பீ 94/47 (viii)

### (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்

6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணி இடப்பரப்பு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமெனவும் "தங்கல்லை ஹெனகடுவ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விஹாரை" என அழைக்கப்படுதல் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலேயுள்ளவாறு வெளிப்படுத்தப்பட்டதான “தங்கல்லை ஹெனகடுவ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விஹாரைக்காக” உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2024, மே 16.*

**அட்டவணை**

**தங்கல்லை ஹெனகடுவ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விஹாரை இடப்பரப்பினைக் கொண்ட காணி இடப்பரப்பு**

தென் மாகாணத்தின், ஹம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்திலுள்ள தங்காலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கிறுவாபத்து மேற்கு சிறு பிரிவின், மெடில்ல (இ. கி. வ. 315) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் 2016, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டுத்திட்ட இல. H/TNG/2016/400 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு எழுத்து ஏ என்னும் பரப்பளவில் 1.2126 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இல. “ஏ” - மெதகெடியகொடவத்த மறுபெயர் வெலேவத்த ஹேனேகடுவெ சுதர்ஷனாராம பன்சல்வத்த**

வடக்கு : வயல் (ஹேனேகடுவ ரஜமகா விஹாரை), காணித்துண்டு இலக்கம் பி மற்றும் வீதி ;
கிழக்கு : காணித்துண்டு எழுத்து பி, வீதி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) ;
தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் வீட்டுத்தோட்டம் (காந்தி கருணாரத்ன மற்றும் பலர்) ;
மேற்கு : வீட்டுத்தோட்டம் (காந்தி கருணாரத்ன மற்றும் பலர்), வயல் (ஹேனேகடுவ ரஜமகா விஹாரை) மற்றும் காணித்துண்டு எழுத்து பி.

EOG 05-0155/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.